செ. வெ. எண் 87

நாள் 27-1-2010

## செய்தி வெளியீடு – 27.1.2010

## பள்ளிப்பட்டு அருகே சாலை விபத்தில் உயிரிழந்த இருவர் குடும்பங்களுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கிருஷ்ணமராஜகுப்பம் மதுரா பாலகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கேசவராஜ் என்பவரின் மகன் பாலசந்தர் மற்றும் அதே கிராமம் ஒட்டர் காலனி வெங்கடய்ய போயடு என்பவரின் மகன் சந்திரன் ஆகிய இருவரும், இருசக்கர வாகனத்தில் செல்லும்போது பள்ளிப்பட்டு – சோளிங்கர் சாலையில் கோரகுப்பம் அருகே ஆட்டோவுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில், இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளனர். இது குறித்து, பள்ளிப்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன் அளித்த மனுவின் மீது திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை பெறப்பட்டு, அதன் அடிப்படையில், அந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (27.1.2010) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9